winmeen.com

முதலாம் வார நடப்பு நிகழ்வுகள்

ஜூலை 2021

ஜூலை 01–07

1. **எந்த ஆண்டுக்குள், நிலச்சீரழிவை ஒழிப்பதற்கு இந்தியா இலக்கு கொண்டுள்ளது?**

அ) 2030 ☑

ஆ) 2035

இ) 2037

ஈ) 2040

✓ பாலைவனமாக்கலுக்கு எதிரான ஐநா தீர்மானத்தில் இந்தியா கையெழு–த்திட்டுள்ளது. அது, 2030ஆம் ஆண்டளவில் நிலச்சீரழிவை ஒழிக்க எண்ணுகிறது. பாலைவனமாக்கல், நிலச்சீரழிவு மற்றும் வறட்சிகுறித்த உயர்மட்ட கூட்டத்தில் சமீபத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். 2019'இல் புது தில்லியில் நடந்த பாலைவனமாக்கலுக்கு எதிரான ஐநா அவையின் 14ஆவது அமர்வின் தலைவராக பிரதமர் மோடி இருந்தார்.

---

2. **உலகில், வாழைப்பழங்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடு எது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) ஈக்வடார்

இ) இந்தியா ☑

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ 2020–21 நிதியாண்டில், இந்தியா, ₹619 கோடி மதிப்புள்ள மொத்தம் 1.91 இலட்சம் டன் வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்துள்ளதாக நடுவண் வணிக அமைச்சகம் தெரிவித்துள்ளது. முந்தைய 2019–20 நிதியாண்டி–ல், ஏற்றுமதி செய்யப்பட்ட ₹660 கோடி மதிப்புள்ள 1.95 லட்சம் மெட்ரிக் டன் வாழைப்பழத்தைவிடவும் இது அதிகமாகும்.

✓ உலக வாழைப்பழ உற்பத்தியில் 25 சதவீத பங்கைக்கொண்ட இந்தியா, மிகப்பெரிய வாழைப்பழ உற்பத்தியாளராக உள்ளது.

---

3. **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற AY.1 என்றால் என்ன?**

அ) கொரோனா வைரஸ் திரிபு ☑



ஆ) விண்வெளித்திட்டம்

இ) COVID தடுப்பூசி

ஈ) உள்கட்டமைப்புத்திட்டம்

✓ B.1.617.2.1 என்னுமொரு புதிய கொரோனா வைரஸ் திரிபு, எளிமையாக புரிவதற்காக 'AY.1' எனக் குறிப்பிடப்படுகிறது. இத்திரிபு, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் மிகவேகமாக பரவிவருவது கண்டறியப்பட்டுள்ளது. இக்கொரோனா வைரஸ் திரிபானது உடலின் நோயெதிர்ப்பு ஆற்றலில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ளும் பண்புகளைக் கொண்டுள்ளது.

✓ இதன்மூலம் உடலின் நோயெதிர்ப்பு ஆற்றல், தடுப்பூசிகள் மற்றும் பிற பொருளெதிரி சிகிச்சைகளை இது பகுதியாகவோ (அ) முழுமையாகவோ எதிர்க்கும்.

---

4. **பிரதமரால் தொடங்கிவைக்கப்பட்ட, 'COVID–19 முன்களப் பணியா–ளர்களுக்கான சிறப்பு பயிற்சி திட்டமானது' எந்தத் திட்டத்தின்கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது?**

அ) பிரதமர் ஆத்ம நிர்பார் பாரத் யோஜனா

ஆ) பிரதமர் கௌஷல் விகாஸ் யோஜனா 3.0 ☑

இ) பிரதமர் தூய்மை இந்தியா திட்டம்

ஈ) PM கேர்ஸ்

✓ இந்தியப் பிரதமர் மோடி, 'COVID–19 முன்களப் பணியாளர்களுக்கான சிறப்பு பயிற்சி திட்டத்தை' தொடங்கினார். நாடு முழுமைக்கும் உள்ள ₹1 இலட்சத்துக்கும் மேற்பட்ட COVID–19 முன்களப்பணியாளர்களின் திறன்–களை மேம்படுத்துவதே இதன் நோக்கம். இந்தத் திட்டம், பிரதமரின் கௌஷல் விகாஸ் திட்டம் 3.0'ன்கீழ் ₹276 கோடி செலவில் மேற்கொள்–ளப்படும் சிறப்பு திட்டமாகும்.

---

5. **இந்தோ–பசிபிக் நிலைப்புத்தன்மைக்காக கீழ்காணும் எந்த இரு நாடுகளுடனான முத்தரப்பு ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டுள்–ளது?**

அ) இத்தாலி – ஜப்பான் ☑

ஆ) பிரான்ஸ் – ஆஸ்திரேலியா

இ) ஐக்கிய அரபு அமீரகம் – நியூசிலாந்து

ஈ) ஜெர்மனி – தென் கொரியா

✓ இந்தியா, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளன. இந்த முத்தரப்பு ஒப்பந்தம் இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் நிலைப்புத்தன்மையையும், விதிகள் அடிப்படையிலான பன்னாட்டு ஒழுங்கையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, "அனைவரின் இசைவு" என்பதையும் "சிலரின் ஆதிக்கத்துக்கு உட்படாதது" என்பதையும் அடிப்படையாகக் கொண்டது ஆகும்.

---

6. **கூட்டு சர்வதேச நிலவு ஆராய்ச்சி நிலையத்திற்கான செயல்திட்ட–த்தை அண்மையில் வெளியிட்ட இரு நாடுகள் எவை?**

அ) அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம்



ஆ) அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து

இ) ரஷ்யா மற்றும் சீனா ☑

ஈ) ரஷ்யா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம்

✓ அண்மையில் ரஷ்யாவும் சீனாவும் இணைந்து கூட்டு சர்வதேச நிலவு ஆராய்ச்சி நிலையத்திற்கான செயல்திட்டத்தை வெளியிட்டன. சர்வதேச நிலவு ஆராய்ச்சி நிலையம் என்பது நீண்டகால செயல்பாட்டு திறனுடன் கூடிய விரிவான அறிவியல் பரிசோதனை தளமாகும். இது, 2036ஆம் ஆண்டு முதல் செயல்படும். பலவிதமான அறிவியல் வசதிகள் மற்றும் உபகரணங்களை இது கொண்டிருக்கும்.

---

7. **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற *Paraceratherium* என்பது பின்வரும் எந்த விலங்கின் அழிந்துபோன ஓர் இனமாகும்?**

அ) காண்டாமிருகம் ☑

ஆ) முதலை

இ) தொன்மா

ஈ) பாம்பு

✓ *Paraceratherium* என்பது கொம்பற்ற காண்டாமிருகத்தின் அழிந்துபோன ஓர் இனமாகும். இது, நிலப்பரப்பில் வாழும் மிகப்பெரிய பாலூட்டிகளுள் ஒன்றாகும். புதைபடிவங்களின் முழுமையற்ற தன்மையால் *Paracerathe–rium*'இன் சரியான அளவு தெரியவில்லை. வறண்ட பாலைவனங்கள் முதல் வெப்பமண்டல காடுகள் வரையிலான வாழ்விடங்களில் இந்த உயிரினம் வாழ்ந்தது.

---

8. **சமீப செய்திகளில் இடம்பெற்ற *Stygarctus keralensis* கண்டுபிடிக்–கப்பட்ட மாநிலம் எது?**

அ) கோவா

ஆ) மகாராஷ்டிரா

இ) கேரளா ☑

ஈ) மணிப்பூர்

✓ கொச்சினின் அறிவியல் & தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கடல்சார் உயிரியல், நுண்ணுயிரியல் மற்றும் உயிரி வேதியியல் துறை பேராசிரியர்கள் NK விஷ்ணுதத்தன், PR ஜெயச்சந்திரன் மற்றும் பிஜோய் நந்தன் மற்றும் கோபன்ஹேகன் பல்கலைக்கழகத்தின் J G ஹேன்சன் ஆகியோரை உள்ளடக்கிய ஓர் ஆய்வுக்குழுவால் கேரள மாநிலத்தில் *Stygarctus keralensis* கண்டுபிடிக்கப்பட்டது. இது *Stygarctus keralensis* இனத்தின்கீழ் பெயரிடப்பட்ட எட்டாவது இனமாகும்.

---

9. **மிகவும் அருகிவிட்ட புல்லினமான *Lophopogon prasannae* கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்திய மாநிலம் எது?**

அ) மணிப்பூர் ஆ) இராஜஸ்தான்

இ) ஆந்திர பிரதேசம் ☑ ஈ) ஹரியானா

- ✓ புதிய புல்லினமான "*Lophopogon prasannae*" சமீபத்தில் ஆந்திர பிரதேச மாநிலத்தின் அனந்தபூர் மாவட்டத்தின் நிஜிடி காட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. Dr PV பிரசன்னாவின் பெயரால் இப்புல்லினம் அழைக்கப்படுகிறது. பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN) 'சிவப்புப்பட்டியல்' அடிப்படையில் இவ்வினம் 'மிகவும் அருகிவிட்ட இனம்' எனக்குறிக்கப்பட்டுள்ளது.

---

10. உலக முதலை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜூன்.15

ஆ) ஜூன்.16

இ) ஜூன்.17 ☑

ஈ) ஜூன்.18

- ✓ உலகெங்கிலுமுள்ள அருகிவரும் முதலை இனங்கள் அவற்றின் அவல நிலையை எடுத்துக்காட்டுவதற்காக ஜூன்.17 உலக முதலை நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவில், சதுப்புநில முதலை (*Crocodylus palustris*); உவர்நீர் முதலை (*Crocodylus porosus*) மற்றும் சொம்புமூக்கு முதலை (*Gavialis gangeticus*) ஆகிய 3 முதலை இனங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சொம்புமூக்கு முதலை இனம் அருகிவரும் இனமாக உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சர்வதேச இணைய பாதுகாப்புக் குறியீடு: 10ஆம் இடத்துக்கு இந்தியா முன்னேற்றம்

2020ஆம் ஆண்டுக்கான சர்வதேச இணைய பாதுகாப்புக் குறியீடு தரவரிசைப்பட்டியலில் 10ஆவது இடத்துக்கு முன்னேறி, உலக அளவில் இணைய பாதுகாப்பில் தலைசிறந்த நாடு என்ற நிலையை இந்தியா எட்டியுள்ளது. 'டிஜிட்டல் இந்தியா' திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்து, வருகிற ஜூலை 1ஆம் தேதி ஆறாம் ஆண்டை நிறைவு செய்ய உள்ள சூழலில், இந்தியாவுக்கு இந்த அங்கீகாரத்தை ஐநா அமைப்பின் அங்கமான சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் வழங்கியிருக்கிறது.

2020ஆம் ஆண்டுக்கான சர்வதேச இணைய பாதுகாப்புக் குறியீடு தரவரிசைப் பட்டியலை ITU வெளியிட்டது. அதில் அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்துள்ளது. பிரிட்டன், சௌதி அரேபியா நாடுகள் இரண்டாம் இடத்தையும், எஸ்தோனியா மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன. இந்த தரவரிசைப் பட்டியலில் இந்தியா ஒட்டுமொத்த அளவில் 10ஆவது இடத்தையும், ஆசிய பசிபிக் பிராந்திய அளவில் 4ஆம் இடத்தையும் பிடித்துள்ளது. கடந்த ஆண்டு பின்தங்கியிருந்த இந்தியா 37 இடங்கள் முன்னேறி, 10ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

சட்ட நடவடிக்கைகள், தொழில்நுட்ப நடவடிக்கைகள், அமைப்புசார்ந்த நடவடிக்கை, திறன்மேம்பாடு, கூட்டு ஒத்துழைப்பு ஆகிய 5 அளவீடுகளின் அடிப்படையில் கேள்வி–பதில் அடிப்படையிலான இணையவழி ஆய்வின்மூலம் சர்வதேச இணைய பாதுகாப்புக் குறியீடு வெளியிடப்படுகிறது. மொத்தம் 100 புள்ளிகளுக்கு நடத்தப்படும் இந்த ஆய்வில் இந்தியா 97.5 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இது, இணைய பாதுப்புக்கான அனைத்து வரையறைகளையும் இந்திய சிறப்பாக வலுப்படுத்தி, இணைய பாதுகாப்பில் மேம்பட்டிருப்பதை காட்டுகிறது.

---

2. ஜூன்.1 – தேசிய மருத்துவர்கள் நாள்

கருப்பொருள்: Save The Saviours.

---

3. அட்டர்னி ஜெனரலாக மீண்டும் கே.கே.வேணுகோபால் நியமனம்

மத்திய அரசின் அட்டர்னி ஜெனரலாக கே.கே.வேணுகோபால் மேலும் ஓராண்டுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு வயது 90.

அட்டர்னி ஜெனரலாக நியமிக்கப்படுபவர் மூன்றாண்டுகளுக்கு அந்தப் பதவியை வகிப்பார். இந்நிலையில் மத்திய அரசின் அட்டர்னி ஜெனரலாக கடந்த 2017 முதல்முறையாக நியமிக்கப்பட்ட கே.கே.வேணுகோபாலின் பதவிக்காலம் கடந்தஆண்டு நிறைவடைய இருந்தது. அவர் பணிநீட்டிப்பு கோரியதையடுத்து அவரின் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டது. அவரின் பணிநீட்டிப்பு காலம் ஜூன்.30 நிறைவடைந்தது. இந்நிலையில் அவரை ஜூலை 1ஆம் தேதி முதல் ஓராண்டு காலம் மீண்டும் அட்டர்னி ஜெனரலாக குடியரசுத்தலைவர் நியமித்துள்ளதாக சட்ட அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சட்டவிவகாரங்கள் துறை அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

---

4. தமிழக அரசுப்பள்ளி ஆசிரியர்கள் 6 பேருக்கு தொழில்நுட்பத்துக்கான தேசிய விருது

தமிழ்நாட்டைச் சார்ந்த அரசுப்பள்ளி ஆசிரியர்கள் அறுவருக்கு தொழில்நுட்பத்துக்கான தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பை மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது. மத்திய கல்வி அமைச்சகம் சார்பில், கடந்த 2010ஆம் ஆண்டு முதல் தகவல் தொழில்நுட்பத்தில் படைப்பாற்றலைக் கொண்டு சிறப்பாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ICT விருது வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சார்பில் இந்த விருது விழா நடத்தப்பட்டு வருகிறது. இதில் கல்வித்துறை சார்ந்து சிறந்த முறையில் தகவல் மற்றும் தொழில்நுட்பக்கலைமூலம் கற்பிப்பவர்களுக்கு விருது வழங்கப்படுகிறது.

அந்த வகையில் 2018 மற்றும் 2019–ஆம் ஆண்டுக்கான விருது பெற்ற ஆசிரியர்களின் பட்டியலை NCERT வெளியிட்டுள்ளது. இதில் 2018ஆம் ஆண்டுக்கான விருதுப் பட்டியலில் நாடு முழுவதிலும் இருந்து 25 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்திலிருந்து அதிகபட்சமாக 3 ஆசிரியர்கள் தேர்வுபெற்றுள்ளனர். 2018ஆம் ஆண்டுக்கான விருதுக்கு தேர்வு பெற்றவர்கள்: கணேஷ், (கணினிசார் வளங்களான காணொளிகள், விளையாட்டுகள், செயலி மூலமாக கணிதம் கற்பிப்பவர்), கிளரியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, திருவாரூர் மாவட்டம்.

மனோகர் சுப்பிரமணியம் (QR குறியீட்டுடன் கூடிய அடையாள அட்டை தயாரித்து மாணவர்களை கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளில் ஆர்வமுடன் பங்கேற்கச் செய்தவர்) வெள்ளியணை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, கரூர் மாவட்டம்.

தயானந்த் (கற்றல்–கற்பித்தலுக்காக 170–க்கும் மேற்பட்ட காணொலிகள் மற்றும் அனிமேஷன்களை உருவாக்கியவர்), உடுமலை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்பூர் மாவட்டம்.

2019ஆம் ஆண்டுக்கான விருதுகள்: நாடு முழுவதிலும் இருந்து 24 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் தமிழகத்தில் இருந்து அதிகபட்சமாக 3 ஆசிரியர்கள் விருது பெற்றுள்ளனர்.

ஜெ செந்தில் செல்வன், (குறைந்த செலவில் ஸ்மார்ட் கரும்பலகையை உருவாக்கியவர்), மாங்குடி அரசு மேல்நிலைப்பள்ளி, சிவகங்கை மாவட்டம்.

தங்கராஜா மகாதேவன், (அனிமேஷன் பாடங்களை உருவாக்கி, சூழலியல் சார்ந்த விடியோக்களைத் தயாரித்துக் கற்பிப்பவர்), பாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சேலம் மாவட்டம்.

இளவரசன் (தொழில்நுட்ப உதவியுடன் இருபத்திரண்டு நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் தனது மாணவர்களை உரையாட வைத்தவர், அரசு அறிமுகப்படுத்தும் முன்னரே QR கோடு திட்டத்தைச் செயல்படுத்தியவர்), வேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சேலம் மாவட்டம்.

இந்த ICT விருது மத்திய கல்வி அமைச்சகம் ஆண்டுதோறும் வழங்கும் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு ஈடானது என்பது குறிப்பிடத்தக்கது.

---

1. 'ஜான் ஹை டு ஜஹான் ஹை' என்ற பெயரில் COVID தடுப்பூசி விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) நலவாழ்வு அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ☑

ஈ) சமூக நீதி அமைச்சகம்

Ministry of Minority Affairs
Government of India

✓ நாட்டின் கிராமப்புற மற்றும் தொலைதூரப்பகுதிகளில் கொரோனா தடுப்பு மருந்து வழங்கல் குறித்த விழிப்புணர்வை உருவாக்கும் வகையிலும், தடுப்பு மருந்து குறித்து சிலர் பரப்பிவரும் வதந்திகள் மற்றும் தவறான தகவல்களை முறியடிக்கவுமாக 'ஜான் ஹை தோ ஜகான் ஹை' என்ற தேசிய அளவிலான பிரச்சாரத்தை நடுவண் சிறுபான்மையினர் நல அமைச்சகம் மேற்கொள்ளவுள்ளது.

✓ இந்தப் பிரச்சாரம், ஜூன்.21 அன்று பல்வேறு சமூக–கல்வி இயக்கங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழுக்கள் ஆகியோருடன் இணைந்து தொடங்கப்பட்டது.

---

2. நடுவணரசின் நலவாழ்வு அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட புதிய மென்பொருளான 'CSS' என்பதன் விரிவாக்கம் என்ன?

அ) Coronavirus Science Software

ஆ) COVID Severity Score ☑

இ) COVID Serious Score

ஈ) COVID Scientific Score

✓ மத்திய நலவாழ்வு அமைச்சகமானது 'COVID Severity Score (CSS)' என்ற மென்பொருளைப் பற்றிய தகவல்களை வெளியிட்டது. இப்புதிய மென்பொருள், தீவிர சிகிச்சை பிரிவில் சுவாசக்கருவி பொருத்துவதற்கா–ன தேவை ஏற்படக்கூடிய நோயாளிகளை கண்டறிந்து இடர் ஏற்படுவ–தற்கு முன்னர் தேவையான ஏற்பாடுகளை செய்ய உதவும்.

✓ இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் ஆதரவுடன், IIT கௌகாத்தியுடன் இணைந்து கொல்கத்தாவைச் சார்ந்த நலம் சார் கண்டறிவுகள் அறக்கட்டளை இம்மென்பொருளை உருவாக்கியுள்ளது. அறிகுறிகள், உடல்நிலை, பரிசோதனை அறிக்கைகள் மற்றும் இணை நோய்த்தன்மை ஆகியவற்றை கணக்கிட்டு தீவிர சிகிச்சைப்பிரிவில் சுவாசக்கருவி பொருத்துவதற்கான தேவை ஏற்படக்கூடிய நோயாளிக–ளை இது கண்டறிகிறது.

---

3. நடப்பாண்டு (2021) யோகா நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ) Yoga and Science

ஆ) Yoga amid COVID

இ) Yoga for Wellness ☑

ஈ) Yoga for World

✓ உலக யோகா நாளானது கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.21 அன்று கொண்டாடப்படுகிறது. ஐநா அவையின் 69ஆம் அமர்வின் தொடக்க விழாவில் பிரதமர் மோடி தனது உரையில் சர்வதேச யோகா தினத்தை கொண்டாட முன்மொழிந்தார்.

✓ "Yoga for Wellness" என்பது நடப்பாண்டில் (2021) வந்த உலக யோகா நாளுக்கான கருப்பொருள் ஆகும்.

---

4. நிலையான அறுசுவை உணவியல் நாள் (Sustainable Gastronom–y Day) அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜூன்.5

ஆ) ஜூன்.10

இ) ஜூன்.18 ☑

ஈ) ஜூன்.26

✓ நிலையான அறுசுவை உணவியல் ஆற்றக்கூடிய பாத்திரத்தை நோக்கி உலகின் கவனத்தைக் குவிப்பதற்காக, ஆண்டுதோறும் ஜூன்.18 அன்று உலக நிலையான அறுசுவை உணவியல் நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ அனைத்து பண்பாடுகளும் நாகரிகங்களும் நிலையான வளர்ச்சியின் பங்காளர்களாக உள்ளன என்பதை இந்தச்சிறப்புநாள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

---

5. உலக அரிவாள் செல் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜூன்.19 ☑

ஆ) ஜூன்.20

இ) ஜூன்.21

ஈ) ஜூன்.22

✓ அரிவாள் செல் நோய் மற்றும் அதன் சிகிச்சை முறைகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.19 அன்று உலக அரிவாள்செல் நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ அரிவாள் செல் நோய் என்பது இரத்தசோகையின் ஒரு மரபுவழி வடிவம் ஆகும். இதில் இரத்த சிவப்பணுக்கள் உடல் முழுவதும் போதுமான உயிர்வளியை எடுத்துச்செல்ல முடியாத நிலையிலிருக்கும். "Shine the Light on Sickle Cell" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கா–னக் கருப்பொருளாகும்.

---

6. 'மோதலின்போதான பாலியல் வன்முறைகளை ஒழிப்பதற்கான பன்னாட்டு நாள்' அனுசரிக்கப்படும் தேதி எது?

அ) ஜூன்.19 ☑

ஆ) ஜூன்.20

இ) ஜூன்.21

ஈ) ஜூன்.22

✓ மோதல்களின்போது மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவ–தற்கும், உலகம் முழுவதும் பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து தப்பிப்பிழைத்து வாழ்வோரை கௌரவிப்பதற்கும் மற்றும் இந்தக் குற்றங்களை ஒழித்துக்கட்டுவதற்காக தங்கள் இன்னுயிரை ஈந்தோருக்கு அஞ்சலி செலுத்தவதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.19 அன்று மோதலின்போதான பாலியல் வன்முறைகளை ஒழிப்பதற்கான பன்னாட்டு நாள் (International Day for the Elimination of Sexual Violence in Conflict) கடைப்பிடிக்கப்படுகிறது.

---

7. நடப்பாண்டு (2021) உலக அகதிகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ) Every Action Counts

ஆ) Anti–racism wins

இ) Rights of Refugees

ஈ) Together we heal, learn and shine ☑

✓ உலகெங்குமுள்ள அகதிகளின் நிலைகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்–துவதற்காக ஆண்டுதோறும் ஜூன்.20 அன்று உலக அகதிகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. "Together we heal, learn and shine" என்பது இந்த ஆண்டில் (2021) வரும் இந்தச் சிறப்பு நாளுக்கான கருப்பொருளாகும்.

✓ 2000 டிசம்பர்.4 அன்று, ஐநா பொது அவை, ஜூன்.20'ஐ உலக அகதிகள் நாளாகக் கொண்டாடப்படும் என முடிவுசெய்தது. கடந்த 1951ஆம் ஆண்டு நடைபெற்ற அகதிகள் மாநாடும் அதன் 1967 நெறிமுறையும் உலகெங்கி–லும் உள்ள அகதிகளைப் பாதுகாக்கின்றன.

---

8. பெர்பெரா வளைகுடா என்றும் அழைக்கப்படுகிற நீர்நிலை எது?

அ) மன்னார் வளைகுடா

ஆ) ஏதன் வளைகுடா ☑

இ) பாக் நீரிணை

ஈ) கட்ச் பாலைவனம்

✓ இந்திய கடற்படையானது முதன்முறையாக ஐரோப்பிய ஒன்றிய கடற்ப–டையுடன் இணைந்து ஒரு கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கிறது. அது, பெர்பெரா வளைகுடா என்றும் அழைக்கப்படுகிற ஏதன் வளைகுடாவில் நடைபெறவுள்ளது. இந்தப்பயிற்சியில் மிகவும் அதிநவீன வான் பாதுகாப்பு, நீர்மூழ்கி பயிற்சிகள், உத்திசார் நிகழ்வுகள் போன்றவை அடங்கும்.

9. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தனிநபர் தங்கம் வென்ற முதல் இந்தியர் யார்?

அ) P T உஷா

ஆ) மில்கா சிங் ☑

இ) தியான் சந்த்

ஈ) பான் சிங் தோமர்

- ✓ "பறக்கும் சீக்கியர்" என்றும் அழைக்கப்படும் மில்கா சிங், COVID தொற்று காரணமாக அண்மையில் காலமானார். அவருக்கு 91 வயது. 1958'இல் வேல்ஸில் நடந்த காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா –வின் முதல் தனிநபர் தங்கப்பதக்கத்தை மில்கா சிங் வென்றார்.
- ✓ படைவீரரும் தடகள வீரருமான மில்கா சிங், பல்வேறு சர்வதேச நிகழ்வு –களில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, நாட்டிற்கு பல பரிசுகளை வென்று கொடுத்துள்ளார்.

---

10. 2024ஆம் ஆண்டளவில், எத்தனை சதவீத அளவுக்கு சாலை விபத்து இறப்புகளைக் குறைப்பதற்கு அரசு இலக்கு கொண்டுள்ளது?

அ) 20%

ஆ) 25%

இ) 50% ☑

ஈ) 75%

- ✓ சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் குறு, சிறு & நடுத்தர நிறுவனங்களுக்கான அமைச்சர் நிதின் கட்கரி, அண்மையில், 2024ஆம் ஆண்டளவில் சாலை விபத்து இறப்புகளை 50% குறைப்பதே அரசாங்கத்தின் இலக்கு எனக் கூறினார். விபத்து நேரிடும் பகுதிகளை அகற்றுவதற்காக, மாநிலங்கள் மற்றும் NHAI'க்கு, அரசு, ₹14000 கோடி ஒதுக்கீடு செய்யுந்திட்டத்திற்கு உலக வங்கியும் ஆசிய வளர்ச்சி வங்கியும் அனுமதித்துள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கு வாசனைப் பயிர்களின் மேம்பாட்டுக்கான விருது

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு வாசனைப் பயிர்களின் மேம்பாட்டுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பல்கலைக்கழகம் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இந்திய அரசின் ஒருங்கிணைந்த தோட்டக்கலைப் பயிர்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாசனைப் பயிர்களின் விதை, நடவுப்பொருள் உற்பத்தி, வாசனைப் பயிர்களின் தொழில்நுட்பத்தை பிரபலப்படுத்துதல் என்ற திட்டமானது வாசனை, மலைத்தோட்டப்பயிர்கள் துறை, பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தை தலைமையிடமாகக்கொண்டு செயல்படுத்தப்பட் –டு வருகிறது.

இந்தத் திட்டத்துக்காக கோழிக்கோட்டில் உள்ள பாக்கு, வாசனைப் பயிா்கள் மேம்பாட்டு இயக்ககம் 2019–20ஆம் ஆண்டுக்கு ₹78.51 லட்சமும், 2020–21ஆம் ஆண்டுக்கு ₹88.87 லட்சமும் நிதி ஒதுக்கியுள்ள –து. இத்திட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள பெரியகுளம், கோயம்புத்தூர், பவானிசாகர், உதகை, ஏற்காடு, திருச்சி, கிள்ளிகுளம், கொடைக்கானல் உள்ளிட்ட 16 துணை மையங்க –ளில் நறுமணப்பயிர்களில் வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் –டு வருகின்றன. இங்கு இஞ்சி, பூண்டு, மிளகாய், கொத்தமல்லி, ஜாதிக்காய், கிராம்பு, இலவங்கப் பட்டை, சா்வசுகந்தி, புளி, கறிவேப்பிலை, நறுமணப் பயிர்களின் விதை, தரமான நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வயல்வெளி முன்னோடி திட்டத்தின்கீழ் நறுமணப் பயிர்களான மஞ்சள், மிளகு, கொத்தமல்லி, மிளகாய் ஆகியவற்றில் அங்கக வேளாண் சாகுபடி திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏற்காடு, தடியன்குடிசை, பேச்சிப்பாறை ஆகிய இடங்களில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்களில் வாசனைப் பயிர்களின் நாற்றங்கால் மேம்படுத்தப்பட்டு கோழிக்கோடு பாக்கு, வாசனைப் பயிர்கள் மேம்பாட்டு இயக்ககத்தின் மூலம் தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. வாசனைப் பயிர்களின் முக்கியத்துவம்பற்றி பிரபலப்படுத்தவும், சாகுபடி பரப்பளவை அதிகரிக்கவும் பல்வேறு துணை மையங்களில் விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், வாசனைப் பயிர்கள் குறித்த கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.

இந்த நிலையில் இத்திட்டத்தின் வருடாந்திர மறுஆய்வுக் கூட்டம் இணையவழியில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அகில இந்திய அளவிலிருந்து பங்கேற்ற 45 மையங்களில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2020–21ஆம் ஆண்டில் தலைசிறந்த செயல்பாட்டு மையமாக அறிவிக்கப்பட்டு, பாராட்டுச் சான்றிதழுடன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. **நடப்பாண்டுக்கான (2021) பேரிடர் அபாயக் குறைப்பு – வறட்சி குறித்த சிறப்பு அறிக்கையின் உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) FAO

ஆ) UNDRR ☑

இ) WFP

ஈ) UNESCO

✓ பேரிடர் அபாயக் குறைப்புக்கான ஐநா அலுவலகமானது (UNDRR) 2021 வறட்சி அபாயக் குறைப்பு – சிறப்பு அறிக்கை குறித்த உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த மதிப்பீட்டின்படி, இந்த நூற்றாண்டில் இதுவரை 1.5 பில்லியன் மக்களை, வறட்சி, நேரடியாக பாதித்துள்ளது. இந்த அதிகரித்த எண்ணிக்கைக்கு காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் மக்கள்தொகை மாற்றங்கள் காரணமாகும்.

---

2. **சமீப செய்திகளில் இடம்பெற்ற 'ICMED 13485 PLUS' என்றால் என்ன?**

அ) தரச்சான்றிதழ் திட்டம் ☑

ஆ) வறுமையொழிப்புத் திட்டம்

இ) சாலை திட்டம்

ஈ) தடுப்பூசி திட்டம்

✓ ICMED என்பது 2016ஆம் ஆண்டில் மருத்துவ சாதனங்கள் சான்றிதழ் பெறுவதற்காக தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும். சமீபத்தில், இந்திய தர கவுன்சிலும் இந்திய மருத்துவ சாதனங்களின் உற்பத்தியாளர்கள் சங்க –மும் இந்தத் திட்டத்தில் சில அம்சங்களைச் சேர்த்துள்ளன இந்தப் புதிய திட்டத்தின் பெயர் "ICMED 13485 PLUS" ஆகும். இது, மருத்துவ சாதனங் –களின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் ஆகியவற்றை சரிபார்க்கும்.

---

3. **பன்னாட்டு கார்பன் விலை தளத்தை அமைக்கவுள்ள அமைப்பு எது?**

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம் ☑

ஆ) உலக வங்கி

இ) ஆசிய வளர்ச்சி வங்கி

ஈ) ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி

✓ புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்துவதற்காக பன்னாட்டு கார்பன் விலை தளத்தை அமைக்க பன்னாட்டுச் செலவாணி நிதியம் (IMF) முன்மொழிந்துள்ளது. இந்த தசாப்தத்தில், குறைந்த கார்பன் வெளியேற்ற –த்தை நோக்கிச்செல்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ பன்னாட்டுச் செலவாணி நிதிய தலைவரின் கூற்றுப்படி, புவி வெப்பம –டைதலை 1.5 முதல் 2 டிகிரி அளவுக்கு மட்டுப்படுத்தினால் 2030'க்குள் உமிழ்வை கால் முதல் அரை பங்கு வரை குறைக்க வேண்டும்.

---

4. **இந்தியாவில் எத்தனால் உற்பத்திக்கான மாற்றுஈவன ஆதாரமாக அடையாளங்காணப்பட்டுள்ள பயிர் எது?**

அ) பருத்தி

ஆ) சணல்

இ) மரவள்ளிக்கிழங்கு ☑

ஈ) உருளைக்கிழங்கு

✓ ICAR–மத்திய கிழங்கு பயிர் ஆராய்ச்சி நிறுவனம் மரவள்ளிக்கிழங்கை உயிரி எத்தனால் உற்பத்திக்கான ஓர் உறுதியான மூலப்பொருளாகக் கண்டறிந்துள்ளது. ஓர் உயிரி எரிபொருள் பயிராக, கரும்புடன் ஒப்பிடும் போது மரவள்ளிக்கிழங்கு பல்வேறு நன்மைகளைக் கொண்டுள்ளது.

✓ மரவள்ளிக்கிழங்கில் அதிக மாவுச்சத்து உள்ளடக்கம் மற்றும் குறைந்த மேலாண்மை நிலைமைகளின்கீழ் வளரும் திறனுள்ளது. இது, இந்தியா –வின் எத்தனால் கலப்பு பெட்ரோல் திட்ட இலக்கு 2025'ஐ அடைய உதவும்.

---

5. **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பெருந்தடுப்புப்பவளத்திட்டு அமைந்துள்ள நாடு எது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) ஆஸ்திரேலியா ☑

இ) ஜப்பான்

ஈ) இந்தியா

✓ ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு கடற்கரையில் 2300 கிமீ நீளத்துக்கு அமைந்துள்ள பெருந்தடுப்புப்பவளத்திட்டானது அதன் அறிவியல் மற்றும் உள்ளார்ந்த முக்கியத்துவத்தின் காரணமாக கடந்த 1981'இல் உலக பாரம்பரிய தரவரிசையைப் பெற்றது. சமீபத்தில், UNESCO பெருந்தடுப்புப் பவளத்திட்டு, உலக பாரம்பரிய தளங்களின் பட்டியலில் வைக்கப்பட வேண்டும் எனக் கூறியது.

---

6. **சமீபத்தில் இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட M–யோகா செயலி, எந்த அமைப்போடு இணைந்து உருவாக்கப்பட்டது?**

அ) ஐநா

ஆ) WHO ☑

இ) CDC

ஈ) ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம்

✓ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, 'உலக நலவாழ்வு அமைப்பு M–யோகா' செயலியை அறிமுகப்படுத்தினார். பொது யோகா செயல்முறையின் அடிப் –படையிலான பல்வேறு யோகா பயிற்சிகள் மற்றும் செய்முறைகள் குறித்த காணொளிகளை பல மொழிகளில் இந்தச் செயலி வழங்கும்.

✓ இந்தச் செயலியை உலக நலவாழ்வு அமைப்பும் (WHO) இந்திய அரசின் ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத் –துவம் மற்றும் ஹோமியோபதி (AYUSH அமைச்சகம்) அமைச்சகமும் இணைந்து உருவாக்கியுள்ளன.

---

7. **ஒலிம்பிக்கில் போட்டியிடுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் திருநங்கை விளையாட்டு வீராங்கனையான லாரல் ஹப்பார்ட் சார்ந்த நாடு எது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) ரஷ்யா

இ) நியூசிலாந்து ☑

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ டோக்கியோ ஒலிம்பிக்கில் போட்டியிடும் முதல் திருநங்கை விளையாட் –டு வீராங்கனையாக நியூசிலாந்தைச் சார்ந்த 43 வயதான லாரல் ஹப்பார்ட் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். சூப்பர் ஹெவிவெயிட் பெண்கள் போட்டியில் பங்கேற்கும்போது, ஹப்பார்ட், ஒலிம்பிக்கில் பங்கேற்கும் முதல் திருநங்கை விளையாட்டு வீராங்கனையாக இருப்பார்.

✓ பன்னாட்டு ஒலிம்பிக் குழு (IOC) குறிப்பிட்டிருக்கும் டெஸ்டோஸ்டிரோன் அளவுகள் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் அவர் சூப்பர் ஹெவிவெயிட் 87 கிலோ பிரிவில் போட்டியிடுவார்.

---

8. **100% கச்சா எண்ணெய் / 100% எத்தனால் பயன்படுத்தக்கூடிய எஞ்சினின் பெயர் என்ன?**

அ) பல எரிபொருள் எஞ்சின்

ஆ) பிளெக்ஸ் எரிபொருள் எஞ்சின் ☑

இ) மாற்று எஞ்சின்

ஈ) நிலையான எஞ்சின்

✓ ஆட்டோமொபைல் தொழிலுக்காக, பிளெக்ஸ் எரிபொருள் எஞ்சின்கள் கட்டாயமாக உருவாக்கப்படும் என்று மத்திய சாலை போக்குவரத்து & நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அறிவித்தார்.

✓ பிளெக்ஸ் எரிபொருள் எஞ்சின்களில், 100% கச்சா எண்ணெயோ (அ) 100% எத்தனாலையோ பயன்படுத்தவியலும். பெட்ரோலில் 20% எத்த –னால் கலப்பதற்கான இலக்கு ஆண்டை, இந்தியா, 2030லிருந்து 2025க்கு மாற்றியமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

9. நடப்பாண்டின் (2021) உலக முதலீட்டு அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ) UNCTAD ☑

ஆ) WTO

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ) உலக வங்கி

- ✓ ஐநா வர்த்தக & மேம்பாட்டு கூட்டமைப்பானது (UNCTAD) அண்மையில் நடப்பாண்டின் (2021) உலக முதலீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. COVID தொற்றுநோயால் உலகளாவிய அந்நிய நேரடி முதலீடு 35% குறைந்துள்ளதாக அவ்வறிக்கை குறிப்பிட்டது.
- ✓ 2020ஆம் ஆண்டில், உலகில், அந்நிய நேரடி முதலீடு (FDI) வருவாயைப் பெறுவதில் ஐந்தாவது பெரிய நாடாக இந்தியா இருப்பதாகவும் அதன் மதிப்பு $64 பில்லியன் டாலராக இருப்பதாகவும் UNCTAD கூறியுள்ளது.

---

10. எஸ்தர் டப்லோ மற்றும் ரகுராம் ராஜன் ஆகியோரைக்கொண்ட பொருளாதார ஆலோசனைக் குழுவை உருவாக்கவுள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) மேற்கு வங்கம்

ஈ) ஆந்திர பிரதேசம்

- ✓ தலைசிறந்த பொருளாதார வல்லுநர்களான நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டப்லோ, இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) முன்னாள் ஆளுநர் இரகுராம் இராஜன், முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன், மேம்பாட்டு பொருளாதார நிபுணர் ஜீன் ட்ரீஸ், முன்னாள் மத்திய நிதிச்செயலாளர் S நாராயண் ஆகியோர் அடங்கிய பொருளாதார ஆலோசனைக் குழுவை உருவாக்குவதற்கு தமிழ்நாடு மாநில அரசு முடிவுசெய்துள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கொந்தகை அகழாய்வு: மேலும் ஒரு சமநிலை எலும்புக்கூடு கண்டெடுப்பு

சிவகங்கை மாவட்டம் கீழடி அருகே கொந்தகையில் நடைபெற்றுவரும் அகழாய்வில் வெள்ளிக்கிழமை சமநிலையில் மேலும் ஒரு எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது. கீழடி, அகரம், மணலூர், கொந்தகை ஆகிய பகுதிகளில் கடந்த பிப்.13 முதல் 7ஆம் கட்ட அகழாய்வுப்பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இதுவரை நடைபெற்ற அகழாய்வுகளின் அடிப்படையில் கொந்தகை பண்டைய காலத்தில் ஈமக் காடாக இருந்தது தெரியவந்துள்ளது.

இங்கு தோண்டப்பட்ட குழிகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள், எலும்புக்கூடுகள் அடுத்தடுத்து கிடைத்து வருகின்றன. கடந்த சில நாள்களுக்கு முன்பு இப்பகுதியில் சமநிலையில் முழு எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதே அகழாய்வுக் குழியில் ஏற்கெனவே கிடைத்த சமநிலை எலும்புக்கூடுக்கு அருகிலேயே, மற்றொரு சமநிலை எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. 3.5 அடி நீளமுள்ள இந்த எலும்பு -க்கூட்டின் பாலினம் ஆய்வுக்கு பின்னரே தெரியவரும் என தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

---

2. உத்தரகண்ட் முதல்வராக புஷ்கர் சிங் தாமி தேர்வு

உத்தரகண்ட் மாநிலத்தின் புதிய முதலமைச்சராக புஷ்கர் சிங் தாமி தேர்வு செய்யப்பட்டுள்ளார். முதலமைச்சராக இருந்த தீரத் சிங் ராவத் ராஜிநாமா செய்ததையடுத்து, டேராடூனில் நடைபெற்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் புதிய முதல்வர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

1. வானூர்தி நிலைய சேவை தரத்திற்காக பன்னாட்டு வானூர்தி நிலைய குழும விருதை வென்ற இந்திய வானூர்தி நிலையம் எது?

அ) மும்பை பன்னாட்டு வானூர்தி நிலையம்

ஆ) தில்லி பன்னாட்டு வானூர்தி நிலையம்

இ) கொச்சின் பன்னாட்டு வானூர்தி நிலையம் ☑

ஈ) சென்னை பன்னாட்டு வானூர்தி நிலையம்

✓ கொச்சின் பன்னாட்டு விமான நிலையமானது விமான நிலைய சேவை தரத்திற்காக பன்னாட்டு விமான நிலைய குழுமத்தின் தலைமை இயக்குநரிடமிருந்து சிறப்பு விருதை வென்றது. விமான நிலைய சேவை தர ஆய்வில், தொடர்ச்சியாக சிறந்த சேவைகளை வழங்கிய வானூர்தி நிலையங்கள், பயணிகளின் கருத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றன.

---

2. உலகின் முதல் பிரத்தியேக 'விரைவு இரயிலுக்கான பசுமை மதிப்பீட்டு முறை'யை அறிமுகப்படுத்தியுள்ள நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) இந்தியா ☑

இ) இஸ்ரேல்

ஈ) ஜப்பான்

✓ விரைவு இரயிலுக்கான உலகின் முதல் பிரத்தியேக பசுமை மதிப்பீட்டு முறையை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது. CII–இந்திய பசுமை கட்டட கவுன்சிலானது IGBC பசுமை விரைவு இரயில் மதிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. IGBC ஆனது தேசிய விரைவு இரயில் கழகத்துடன் ஒத்துழைத்துள்ளது. இந்த மதிப்பீட்டு முறை, புதிய விரைவு இரயில் நிலையங்களை அவற்றின் செயல்பாடுகளின்போது ஆற்றல் திறமையான கருத்தாக்கங்களைப் பயன்படுத்துவதற்கு உதவும்.

---

3. NFSA பயனாளிகளுக்கு கூடுதல் உணவு–தானியங்களை வழங்கும் பின்வரும் எந்தத் திட்டம், நவம்பர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது?

அ) பிரதமர் கிஸான்

ஆ) பிரதமர் கரீப் கல்யாண் யோஜனா ☑

இ) பிரதமர் ஆத்ம நிர்பார் யோஜனா

ஈ) PM உணவு தானிய யோஜனா

✓ பிரதமரின் ஏழைகள் நல உணவு திட்டத்தை 2021 ஜூலையிலிருந்து 2021 நவம்பர் மாதம் வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பிரதமரின் ஏழைகள் நல உணவு திட்டம் (கட்டம் – 4) கீழ், தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் அதிகபட்சம் 81.35 கோடி பயனாளிகளுக்கு ஜூலை முதல் நவம்பர் வரை ஒரு மாதத்திற்கு ஐந்து கிலோ உணவு தானியங்கள் இலவசமாக வழங்கப்படும்.

---

4. ஓர் அண்மைய ஆய்வின்படி, உலகில் பல்வேறு வகையிலான பட்டாம்பூச்சிகள் காணப்படும் நாடு எது?

அ) கொலம்பியா ☑

ஆ) பிஜி

இ) பப்புவா நியூ கினியா

ஈ) நியூசிலாந்து

✓ இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் வெளியிட்டுள்ள ஓர் அண்மைய ஆய்வின்படி, பல்வேறு வகையிலான பட்டாம்பூச்சிகளின் தாயகமாக கொலம்பியா உள்ளது. தென்னமெரிக்க நாட்டில் அறியப்பட்ட அனைத்து உயிரினங்களிலும் சுமார் 20% பட்டாம்பூச்சிகளாக உள்ளன. சர்வதேச அறிவியலாளர்கள் குழு, "கொலம்பிய பட்டாம்பூச்சிகளின் சரிபார்ப்பு பட்டியல்" என்ற தலைப்பில் ஆவணமொன்றைத் தயாரித்தது.

✓ கொலம்பியாவில் மட்டும் இருநூற்றுக்கும் மேற்பட்ட வண்ணத்துப்பூச்சி இனங்கள் காணப்படுகின்றன.

---

5. NASA'இன் ரோபோட்டிக் உலங்கு வானூர்தியான இஞ்செனுயிட்டி, எந்த வான் பொருளில் இயங்கி வருகிறது?

அ) நிலா

ஆ) செவ்வாய் ☑

இ) வெள்ளி

ஈ) வியாழன்

✓ அமெரிக்க விண்வெளி ஆய்வு முகமையின் 'மார்ஸ் 2020' திட்டத்தின் ஒருபகுதியாக செவ்வாய்க்கோளில் இயங்கும் NASA'இன் சிறு ரோபோ உலங்கு வானூர்திதான் 'இஞ்செனுயிட்டி'.

✓ இந்த உலங்கு வானூர்தி, எட்டாவது முறையாக, செவ்வாய்க்கோளில் ஒரு புதிய இடத்தில் தரையிறங்கியது. அதன்சமயம், 160 மீட்டர் தெற்கே ஒரு புதிய இடத்திற்கு அந்த உலங்கு வானூர்தி பறந்துசென்றது.

---

6. பசுமை ஹைட்ரஜன் முன்னெடுப்புகள்குறித்த BRICS உச்சிமாநாட்டை நடத்தவுள்ள நாடு எது?

அ) இந்தியா ☑

ஆ) ரஷ்யா

இ) பிரேஸில்

ஈ) சீனா

✓ இந்திய அரசுக்கு சொந்தமான NTPC லிட், பசுமை ஹைட்ரஜன் முன்னெடுப்புகள் குறித்த இரண்டு நாள் உச்சிமாநாட்டைத் தொகுத்து வருகிறது. இந்த நிகழ்வில், BRICS நாடுகளின் பங்கேற்பு அடங்கும்.

✓ இவ்வுச்சிமாநாடு, உலகநாடுகளின் பசுமை ஹைட்ரஜன் முன்னெடுப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளத்தை உருவாக்குகிறது. மேலும், பசுமை ஆற்றலை அடுத்த கட்டங்களுக்கு கொண்டுசெல்ல ஒரு விரிவான செயல்திட்டங்களை முன்வைக்கிறது.

---

7. 'குழந்தைகள் மற்றும் ஆயுத மோதல்கள்' குறித்த வருடாந்திர அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ) ஐநா ☑

ஆ) யுனெஸ்கோ

இ) யுனிசெஃப்

ஈ) ஐ.யு.சி.என்

✓ சிறார்கள் & ஆயுத மோதல்கள் குறித்து ஐநா தலைவர் அன்டோனியோ குடரெஸ், பாதுகாப்பு கவுன்சிலுக்கு அனுப்பிய ஆண்டு அறிக்கையின்படி, கடந்த ஆண்டு உலகம் முழுவதும் பல்வேறு மோதல்களில் 8,500'க்கும் மேற்பட்ட குழந்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

✓ சோமாலியா, காங்கோ மக்களாட்சிக் குடியரசு, ஆப்கானிஸ்தான், சிரியா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளில், கடந்த 2020'ஆம் ஆண்டில் அதிக விதி மீறல்கள் நடந்துள்ளன.

---

8. உலக இசை நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜூன்.20

ஆ) ஜூன்.21 ☑

இ) ஜூன்.22

ஈ) ஜூன்.23

✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.21 அன்று உலக இசை நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாள், முதன்முதலில், 1982ஆம் ஆண்டில் பிரான்ஸில் கொண்டாடப்பட்டது. கோடை கதிர்த்திருப்ப நிலையுடன் இந்த நாள் ஒத்துப்போகிறது. மேலும், மக்களை, இசைகேட்டு மகிழ்வடையச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

9. செய்திகளில் நம்பகத்தன்மையின் அடிப்படையில், 'டிஜிட்டல் செய்தி அறிக்கை – 2021'இல் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 11

ஆ) 21

இ) 31 ☑

ஈ) 41

- ✓ டிஜிட்டல் செய்தி அறிக்கையின் 10ஆம் பதிப்பை, ராய்ட்டர்ஸ் நிறுவனம், பத்திரிகை ஆய்வுக்காக வெளியிட்டுள்ளது. செய்தி நுகர்வில் COVID–19 தொற்றின் தாக்கத்தை இது விவரிக்கிறது. இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, நைஜீரியா, கொலம்பியா மற்றும் பெரு உட்பட 6 கண்டங்கள் மற்றும் 46 சந்தைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையி –ல் இந்த அறிக்கை தொகுக்கப்பட்டுள்ளது. செய்தி மீதான நம்பிக்கையின் அடிப்படையில், 46 நாடுகளுள் இந்தியா 31ஆவது இடத்தில் உள்ளது.

---

10. 'துளிர் நிறுவனங்கள் மற்றும் இடர் நிதியளிப்புபற்றிய ஆராய்ச்சி மையத்'தை (CREST) அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?

அ) IIT சென்னை ☑

ஆ) IIT மும்பை

இ) IIT ஆமதாபாத்

ஈ) IIT பெங்களூரு

- ✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – சென்னை, 'துளிர் நிறுவனங்கள் & இடர் நிதியளிப்புபற்றிய ஆராய்ச்சி மையத்'தை அறிமுகப்படுத்தியுள்ளது. உயர்தர ஆராய்ச்சியில் ஈடுபடுவதில் உள்ள பெரும் இடையூறுகளை எதிர்கொள்வதற்காக இது இந்திய துளிர்நிறுவன நிலைகளில் ஒரு தரவு களஞ்சியத்தை உருவாக்கும்.
- ✓ ஆராய்ச்சியாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் அணுகக்கூடியதாக இருக்கும் இந்தத் தகவல்கள் சர்வதேச வெளியீடுகளுக்கு வழிவகுக்கும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1.அனைவருக்கும் எழுத்தறிவு அளிக்கும் 'நிபுண் பாரத் திட்டம்' தொடக்கம்

2020ஆம் ஆண்டின் தேசியக் கல்வி கொள்கையின் ஓர் அங்கமாக, நாட்டில் அனைத்துக் குழந்தைகளுக்கும் எழுத்தறிவு வழங்கும் 'நிபுண் பாரத்' திட்டம் ஜூலை.5 அன்று தொடங்கி வைக்கப்படுகிறது.

மத்திய கல்வித்துறையின்கீழ் உள்ள பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் புரிதலுடன் வாசிப்பதிலும், எண்ணறிவில் போதிய தகுதியைப் பெறுவதற்கு ஏதுவாக 'நிபுண் பாரத்' என்கிற திட்டத்தை இயக்கமாக அறிமுகப்படுத்தவிருக்கிறது.

நாட்டில் 3 வயது முதல் 11 வயது வரையில் சுமார் 5 கோடி குழந்தைகள் உள்ளன. இதை முன்னிட்டு 2026–27ஆம் ஆண்டிற்குள் மூன்றாம் வகுப்பை நிறைவுசெய்வதற்குள் ஒவ்வொரு குழந்தையும் புரிதலுடனான எழுத்து வாசிப்பிலும், எண்ணறிவில் போதிய தகுதியைப் பெறுவதற்கும் ஏதுவாக, அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவைப் பெறுவதற்கான சூழலியலை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் இந்த இயக்கம் தொடங்கப்படுகிறது.

இத்திட்டம், அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் தேசிய–மாநில–மாவட்ட–வட்டார–பள்ளிகள் ஆகிய ஐந்து நிலைகளில் மத்திய அரசின் 'சமக்ரா ஷிக்ஷா' திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது.

---

2. வெப்ப அலை தாக்குதல்: ஐம்பது ஆண்டுகளில் 17,000 பேர் பலி; ஆய்வறிக்கையில் தகவல்

இந்தியாவில் கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட வெப்ப அலை தாக்குதல் சம்பவங்களில் 17,000'க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக, ஓர் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலர் M இராஜீவன் தலைமையிலான அறிவியலாளர்கள் குழு இந்த ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

இந்தியாவில் கடந்த 1971 முதல் 2019 வரையிலான 50 ஆண்டுகளில் மோசமான வானிலை காரணமாக நிகழ்ந்த விபத்துகளால் 1,41,308 பேர் உயிழந்திருக்கிறார்கள். அவர்களில், வெப்ப அலைதாக்குதல் காரணமாக மட்டும் 17,362 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இது மொத்த உயிரிழப்பில் 12 சதவீதமாகும். 2019 வரையிலான 50 ஆண்டுகளில் மொத்தம் 706 வெப்ப அலை தாக்குதல் சம்பவங்கள் இந்தியாவில் நடந்துள்ளன.

வெப்ப அலை தாக்குதலால், ஆந்திர பிரதேசம், தெலங்கானா, ஒடிஸா ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. பஞ்சாப், ஹிமாசல பிரதேசம், உத்தரகண்ட், தில்லி, ஹரியானா, இராஜஸ்தான், உத்தரபிரதேசம், குஜராத், மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், பீகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம், ஒடிஸா, ஆந்திர பிரதேசம், தெலங்கானா மாநிலங்களில் மே மாதங்களில் அடிக்கடி வெப்ப அலை தாக்குதல் நிகழ்கின்றன.

வட இந்திய சமவெளிப் பகுதியிலும், மலைப் பகுதியிலும் வெப்ப அலை தாக்குதல் சம்பவங்கள் நடைபெறுகின்றன. கடந்த வாரம் சமவெளிப் பகுதியில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸுக்கும் அதிகமாக இருந்தது. மோசமான வானிலையால் ஏற்படும் விபத்துகளில் வெப்ப அலை தாக்குதல், மின்னல் தாக்குதல் ஆகியவற்றால்தான் அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்று அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. ஜம்மு–காஷ்மீர் தொடர்பான எல்லை வரையறை ஆணையத்தின் தலைவர் யார்?

அ) ஏ.கே.சிக்ரி

ஆ) ரஞ்சன் கோகோய்

இ) ரஞ்சனா தேசாய் ☑

ஈ) கே வி காமத்

✓ 370ஆவது பிரிவு இரத்து செய்யப்பட்டு 2019 ஆகஸ்டில் ஜம்மு மற்றும் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை திரும்பப்பெற்ற 6 மாதங்களுக்குப் பிறகு வரையறை ஆணையம் அமைக்கப்பட்டது.

✓ இந்த ஆணையத்திற்கு ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சனா தேசாய் தலைமை தாங்குகிறார். சமீபத்தில் இந்த ஆணைக்குழு, ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள அனைத்து 20 மாவட்டங்களின் துணை ஆணையர்களுடன் ஒரு சந்திப்பை நடத்தியது. பிரதமர் அழைப்பு விடுத்த அனைத்து கட்சி கூட்டத்திற்கு முன்னதாக இது நடைபெற்றது.

---

2. டிராகுனோவ் குறிபார்த்து சுடும் துப்பாக்கிகளை இந்திய இராணுவத்திற்கு வழங்கிய நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா ☑

இ) இஸ்ரேல்

ஈ) ஜப்பான்

✓ இந்திய இராணுவமானது 1990'களில் ரஷ்யாவிலிருந்து டிராகுனோவ் என்ற குறிபார்த்து சுடும் துப்பாக்கிகளை வாங்கியது. உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் தற்கால துப்பாக்கிகளைவிட இது பழையதாகும்.

✓ சமீபத்தில், டிராகுனோவ் துப்பாக்கியின் நவீன வடிவத்தினை இந்திய இராணுவத்திடம் வழங்க ரஷ்யா ஒப்புக்கொண்டது.

---

3. இந்திய வான்படையும் இந்திய கடற்படையும் பின்வரும் எந்த நாட்டின் கடற்படையுடன் இணைந்து திருவனந்தபுரத்திற்கு தெற்கே 'பாஸேஜ்' என்ற பயிற்சியில் பங்கேற்றன?

அ) அமெரிக்கா ☑

ஆ) ஆஸ்திரேலியா

இ) பிரான்ஸ்

ஈ) ஜப்பான்

✓ இந்திய வான்படை மற்றும் இந்திய கடற்படை ஆகியவை அமெரிக்க கடற்படையின் கேரியர் ஸ்ட்ரைக் குழுவுடன் இணைந்து 'பாஸேஜ்' என்றவொரு பயிற்சியில் பங்கேற்றன. திருவனந்தபுரத்திற்கு தெற்கே இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்திய முன்னணியில், சுகோய் விமானம், ஜாகுவார்ஸ், எரிபொருள் நிரப்பும் வானூர்தி மற்றும் போர்க் கப்பல்கள் மற்றும் கடற்புற ரோந்து வானூர்திகள் பங்கேற்றன.

---

4. ஹுருன் ஆராய்ச்சி & எடெல்கிவ் அறக்கட்டளை அறிக்கையின்படி, கடந்த நூற்றாண்டின் உலகின் மிகப்பெரிய கொடையாளி யார்?

அ) ஜாம்செட்ஜி டாடா ☑

ஆ) முகேஷ் அம்பானி

இ) பில் கேட்ஸ்

ஈ) ரஜினிகாந்த்

✓ ஹுருன் ஆராய்ச்சி மற்றும் எடெல்கிவ் அறக்கட்டளை அறிக்கையின்படி, இந்தியாவின் தொழிலதிபரும் டாடா குழும நிறுவனருமான ஜாம்செட்ஜி நுசர்வான்ஜி டாடா, கடந்த நூற்றாண்டின் உலகின் மிகப்பெரிய கொடையாளி என்று அறிவிக்கப்பட்டுள்ளார். அவர், $102.4 பில்லியன் மதிப்புள்ள நன்கொடைகளை வழங்கியுள்ளார். பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் இரண்டாவது இடத்தைப் பிடித்தனர். விப்ரோ நிறுவனர் மற்றும் தலைவரான அசிம் பிரேம்ஜி, பட்டியலில் 12ஆவது இடத்தில் உள்ளார்.

---

5. பின்வரும் எந்த நிறுவனத்துடன் மத்திய ரயில்சைட் கிடங்கு நிறுவனம் இணைக்கப்படவுள்ளது?

அ) மத்திய கிடங்கு கழகம் ☑

ஆ) ஐ.ஆர்.சி.டி.சி.

இ) ஜி.எஸ்.ஆர்.இ லிமிடெட்

ஈ) என்டிபிசி

Central Warehousing Corporation

✓ "குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச ஆளுகை" என்பதற்கு இணங்கவும், எளிதாக தொழில்புரிவதை மேம்படுத்தவுமாக, மத்திய ரயில்சைட் கிடங்கு நிறுவனம் மற்றும் மத்திய கிடங்கு நிறுவனம் இணைப்புக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இதன்மூலம் இந்நிறுவனங்களின் சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் உரிமைகள் ஒன்றாக இணைக்கப்படும். இந்த இணைப்பு, இரு நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒரே நிர்வாகத்தின் கீழ் இணையும்.

---

6. கடந்த 1997ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஓர் உயர்நிலை ஆலோசனைக்குழுவான MSDC உடன் தொடர்புடைய அமைச்சகம் எது?

அ) திறன் மேம்பாட்டு அமைச்சகம்

ஆ) துறைமுகம், கப்பல் மற்றும் நீர்வழி அமைச்சகம் ☑

இ) கல்வி அமைச்சகம்

ஈ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ கடல்சார் மேம்பாட்டு கவுன்சில் (MSDC) என்பது கடந்த 1997ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஓர் உயர்நிலை ஆலோசனைக் குழுவாகும். அது, முதன்மை மற்றும் முதன்மையற்ற துறைமுகங்களின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டதாகும்.

✓ சமீபத்தில், துறைமுகம், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துக்கான மத்திய இணையமைச்சர் காணொளிவழியில் MSDC'இன் 18ஆவது கூட்டத்திற்கு தலைமைதாங்கினார். 'இந்திய துறைமுக மசோதா–2021' ஆனது கடலோரப்பகுதியின் உகந்த மேலாண்மை மற்றும் பயன்பாட்டை உறுதிசெய்யும் என அவர் எடுத்துரைத்தார்.

---

7. டோக்கியோ 2020'இல் பங்கேற்கும் இந்திய ஒலிம்பிக் அணிக்கான அதிகாரப்பூர்வ பாடலின் இசையமைப்பாளர் யார்?

அ) ஏ ஆர் ரஹ்மான்

ஆ) மோஹித் சவுகான் ☑

இ) விஷால் தத்லானி

ஈ) சங்கர் மகாதேவன்

✓ டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் இந்திய ஒலிம்பிக்குழுவின் பாடலை மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சர் கிரண் ரிஜிஜு, ஒலிம்பிக் தினத்தை முன்னிட்டு புது தில்லியில் அறிமுகப்படுத்தினார்.

✓ இந்தப் பாடலை பாடகர் மோஹித் சவுகான் இசையமைத்து, பாடியுள்ளார். டோக்கியோ போட்டிகளில், 100'க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் இந்தியாவின் சார்பாக பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

8. ஐ.சி.சி'இன் முதல் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பை வென்ற நாடு எது?

அ) இந்தியா

ஆ) நியூசிலாந்து ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) இங்கிலாந்து

NEW ZEALAND CRICKET

✓ ஐ.சி.சி'இன் முதல் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் இறுதிப்போட்டியில், நியூசிலாந்து, இந்தியாவை வீழ்த்தி முதல் உலக டெஸ்ட் சாம்பியனானது. இது, இருபதாண்டுகளில் நியூசிலாந்து வெல்லும் முதல் ஐ.சி.சி பட்டம் ஆகும். இறுதிப்போட்டியன்று நியூசிலாந்து 139 ரன்கள் இலக்கை, எட்டு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எடுத்தது.

---

9. **ஐநா தரவுகளின்படி, நடப்பு 2021ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகெங்கிலும் உள்ள கைம்பெண்களின் எண்ணிக்கை என்ன?**

அ) 25 மில்லியன்

ஆ) 258 மில்லியன் ☑

இ) 56 மில்லியன்

ஈ) 568 மில்லியன்

- ✓ பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும், கைம்பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமாக, ஐநா பொது அவை, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி ஜூன்.23'ஐ பன்னாட்டு கைம்பெண்கள் நாள் என அறிவித்தது. இந்த நாள், இணையை இழந்த பெண்களுக்கு ஆதரவு காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ ஐக்கிய நாடுகள் அவையின் கூற்றுப்படி, உலகெங்கும் 258 மில்லியன் கைம்பெண்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பத்தில் ஒருவர் கடுமையான வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

---

10. **'எல்லைகளற்ற வரி ஆய்வாளர்கள்' என்பது எந்த அமைப்புடன் இணைந்த UNDP'இன் முன்னெடுப்பாகும்?**

அ) OECD ☑

ஆ) IMF

இ) UNESCO

ஈ) UNICEF

- ✓ ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டமும் (UNDP) பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பும் (OECD) இணைந்து, பூட்டான் நாட்டில் "எல்லைகளற்ற வரி ஆய்வாளர்கள்" என்ற கூட்டு முயற்சியைத் தொடங்கின. இந்த முன்னெடுப்புக்கு, இந்தியாவும் ஒரு கூட்டாளராக தேர்வுசெய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், பூட்டான் நாட்டுக்கு அதன் வரி நிர்வாகத்தை வலுப்படுத்த உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மனித உரிமை ஆர்வலர் ஸ்டேன் சுவாமி மறைவு

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சமூக செயற்பாட்டாளர் ஸ்டேன் சுவாமியின் காலமானார். எல்கர் பரிஷத் வழக்கில் தேசிய புலனாய்வு முகமையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் மனித உரிமை ஆர்வலருமான அவர் உயிரிழந்தார்.

---

2. டோக்கியோ ஒலிம்பிக்: மேரி கோம், மன்பிரீத் சிங் கொடியேந்துகின்றனர்

டோக்கியோ ஒலிம்பிக் போட்டி தொடக்க நிகழ்ச்சி அணிவகுப்பின்போது இந்தியாவின் சார்பில் குத்துச்சண்டை வீராங்கனை மேரிகோம், ஹாக்கி வீரர் மன்பிரீத் சிங் ஆகியோர் தேசிய கொடியேந்திச் செல்லவுள்ளனர். அதேபோல், நிறைவு நிகழ்ச்சி அணிவகுப்பின்போது மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா தேசிய கொடியேந்திச் செல்ல இருப்பதாக இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்தது. இந்த முடிவு டோக்கியோ ஒலிம்பிக் போட்டி ஒருங்கிணைப்புக் குழுவிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. புதிய வானிலை ஆய்வு செயற்கைக்கோள்: வெற்றிகரமாக செலுத்தியது சீனா

புதிய வானிலை ஆய்வு செயற்கைக்கோளை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. வானிலை முன்னறிவிப்பை மேம்படுத்தவும், கடல் வெப்பநிலையைக் கண்காணிக்கவும் இந்த செயற்கைக்கோள் உதவும் என அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அச்செய்தி நிறுவனம் தெரிவித்திருப்பது: 11 செயற்கை உணர்திறன் கருவிகள் கொண்ட FY–3இ என்ற அச்செயற்கைக்கோள் வடமேற்கு சீனாவில் உள்ள ஜிகுவான் செயற்கைக்கோள் ஏவுதள மையத்திலிருந்து லாங் மார்ச் 4–சி ஏவுகணைமூலம் திட்டமிடப்பட்ட சுற்றுப்பாதைக்குள் செலுத்தப்பட்டது.

8 ஆண்டு செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள செயற்கைக் கோள், வளிமண்டல வெப்பநிலை, ஈரப்பதம் ஆகியவற்றைக் கண்காணிக்கும். மேலும், வானிலை பேரழிவுகளைத் தடுக்கும் வகையில் உலகளாவிய பனிப்படலம், கடல்நீர் வெப்பநிலை, இயற்கைப் பேரிடர்கள் ஆகியவற்றையும் கண்காணிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. **பரிசோதனை நோக்கங்களுக்காக கணவாய் மீன்குஞ்சுகளை விண்வெளிக்கு கொண்டு சென்றுள்ள விண்வெளி நிறுவனம் எது?**

அ) ISRO

ஆ) ESA

இ) ROSCOSMOS

ஈ) NASA ☑

✓ அமெரிக்க விண்வெளி முகமையான NASA, பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக சில கணவாய் மீன்குஞ்சுகளை விண்வெளிக்கு கொண்டு சென்றுள்ளது. ஹவாய் பல்கலைக்கழகத்தின் – கெவாலோ கடல்சார் ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இந்தக் கணவாய் மீன் குஞ்சுகள், பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு ஸ்பேஸ்எக்ஸ் ஏவுகலம்மூலம் அனுப்பப்பட்டன.

---

2. **வேளாண்துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில், எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா சமீபத்தில் கையெழுத்திட்டது?**

அ) மலேசியா

ஆ) பிஜி ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ இந்தியா மற்றும் பிஜி நாடுகளுக்கிடையே வேளாண்மை மற்றும் அது சம்பந்தமான துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா அரசு கையெழுத்திட்டுள்ளது.

✓ பால்வள மேம்பாடு, அரிசி மேம்பாடு, பன்முகத்தன்மை வாய்ந்த கிழங்குப் பயிர்கள், நீர்வள மேலாண்மை, தேங்காய் மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் இந்த ஒப்பந்தம் ஒத்துழைப்பை வலுப்படுத்தும்.

---

3. **எந்த இந்திய மாநிலத்தில், உலகின் முதல் மரபணு மாற்றப்பட்ட ரப்பரின் கள சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?**

அ) கேரளா

ஆ) கர்நாடகா

இ) அஸ்ஸாம் ☑

ஈ) மத்திய பிரதேசம்

✓ இந்திய இரப்பர் வாரியமானது உலகின் முதல் மரபணு மாற்றப்பட்ட ரப்பரின் களசோதனைகளை கௌகாத்தியில் உள்ள ரப்பர் வாரியத்தின் சாருதாரி ஆராய்ச்சி பண்ணையில் தொடங்கியது.

✓ இந்த இரப்பரை கேரளாவின் கோட்டயம் புதுப்பள்ளியில் உள்ள இரப்பர் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது. கேரள மாநிலத்தில் மரபணு மாற்றப்பட்ட பயிர்களின் கள சோதனைகளை நடத்த கேரள அரசு மறுப்பு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

---

4. **முவ்வகையான முதலைகளையும் கொண்ட ஒரே மாநிலம் எது?**

அ) கேரளம்

ஆ) பீகார்

இ) ஒடிஷா ☑

ஈ) மேற்கு வங்கம்

✓ ஒடிசாவில் அண்மையில் சொம்புமூக்கு முதலைகளின் இயற்கையான கூடுகள் கண்டறியப்பட்டது. இதன்மூலம், நன்னீர் முதலைகள், சொம்பு மூக்கு முதலைகள் மற்றும் உவர்நீர் முதலைகள் ஆகிய மூன்று வகை முதலை இனங்களையும் கொண்ட ஒரே மாநிலமாக ஒடிஸா ஆனது.

✓ சொம்புமூக்கு முதலைகள் முதன்முதலில் கடந்த 1975'இல் ஒடிஷா மாநிலத்தில் வளர்க்கப்பட்டன. உவர்நீர் முதலைகள் மற்றும் நன்னீர் முதலைகளுடன் ஒப்பிடும்போது சொம்புமூக்கு முதலைகள் மிகவும் அருகிவிட்ட இனமாகவும் மரபணு ரீதியாக பலவீனமான உயிரினமாகவும் கருதப்படுகின்றன.

---

5. **சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'கோப்பர்நிக்கஸ் சென்டினல்–6 மைக்கேல் பிரீலிச்' என்பது எவ்வகையான செயற்கைக்கோளாகும்?**

அ) பெருங்கடல் கண்காணிப்பு செயற்கைக்கோள் ☑

ஆ) தகவல்தொடர்பு செயற்கைக்கோள்

இ) தொலையுணரி செயற்கைக்கோள்

ஈ) வழிகாட்டும் செயற்கைக்கோள்

✓ கோப்பர்நிக்கஸ் சென்டினல்–6 மைக்கேல் பிரீலிச் செயற்கைக்கோள் ஆனது 2020 நவம்பரில் ஏவப்பட்டது. இது ஒரு பெருங்கடல்–கண்காணிப்பு செயற்கைக்கோளாகும். இது கடல்மட்டத்தின் உயர்வை அளவிடுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

✓ 6 மாதகால அளவுத்திருத்த பணிகளுக்குப்பிறகு, இச்செயற்கைக்கோள், அண்மையில், செயல்படத் தொடங்கியது. ஐரோப்பிய ஒன்றியத்தின் திட்டமான இதனை, ESA, NASA மற்றும் CNES பிரெஞ்சு முகமை ஆகியவை இணைந்து செயல்படுத்துகின்றன. கோப்பர்நிக்கஸ் சென்டினல்–6பி செயற்கைக்கோளானது 2025'இல் ஏவப்படவுள்ளது.

---

6. **ஆண்டுதோறும் உலக ஒலிம்பிக் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஜூன்.23 ☑

ஆ) ஜூன்.24

இ) ஜூன்.25

ஈ) ஜூன்.26

✓ ஆண்டுதோறும் ஜூன்.23 அன்று உலக ஒலிம்பிக் நாளாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. நவீன ஒலிம்பிக் போட்டிகள், 1894ஆம் ஆண்டு ஜூன்.23 அன்று பாரிசில் உள்ள சோர்போனில் தொடங்கியதை நினைவுகூரும் வகையில் இந்நாள் முதன்முதலில் 1948ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

✓ வயது, பாலினம் அல்லது தடகள திறனை பொருட்படுத்தாமல் மக்கள் விளையாட்டில் பங்கேற்பதை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

7. **"Suicide Worldwide 2019" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ) உலக நலவாழ்வு அமைப்பு ☑

ஆ) ஐநா

இ) UNICEF

ஈ) பன்னாட்டு மன்னிப்பு அவை

✓ சமீபத்தில், உலக நலவாழ்வு அமைப்பு "Suicide Worldwide 2019" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

✓ அவ்வறிக்கையின்படி, ஒவ்வோர் ஆண்டும் 7 இலட்சம்பேர் தற்கொலை செய்துகொண்டு மரணிக்கின்றனர். உலகில் நடைபெறும் தற்கொலைகளில் கிட்டத்தட்ட 77% குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளில் நிகழ்கின்றன எனவும் 15–19 வயதுடையவர்களின் இறப்புக்கான முக்கிய காரணங்களுள் தற்கொலை நான்காவது இடத்தில் உள்ளது என்றும் இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது.

---

8. **குய்லின்–பார் நோய்க்குறியானது பின்வரும் எந்தத்தடுப்பூசியுடன் தொடர்புடையது எனத் தெரிவிக்கப்படுகிறது?**

அ) அஸ்ட்ராஜெனெகா–ஆக்ஸ்போர்டு தடுப்பூசி ☑

ஆ) கோவாக்ஸின்

இ) ஸ்புட்னிக்

ஈ) சினோவாக்

✓ குய்லின்–பார் நோய்க்குறி என்பது ஓர் அரிய நரம்பியல் கோளாறு ஆகும். அதில், உடலின் நோயெதிர்ப்பு அமைப்பானது நரம்பு இழைகளில் உள்ள அதன் சொந்த பாதுகாப்பு பூச்சுகளையே தாக்குகிறது. ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் உள்ள சில நோயாளிகளிடையே அஸ்ட்ராஜெனெகா–ஆக்ஸ்போர்டு COVID-19 தடுப்பூசி செலுத்தப்பட்டபின் இந்த நோய்க்குறி தோன்றியதாக முதன்முதலில் அறிவிக்கப்பட்டது.

- ✓ இந்த நோய்க்குறி, தீவிர பலவீனத்துடன் தொடங்கி இறுதியில் முழு உடலையும் செயலிழக்கச் செய்யலாம். இந்தத் தடுப்பூசி, இந்தியாவில் 'கோவிஷீல்ட்' என்ற பெயரில் வர்த்தகம் செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவிலும் இதுபோன்ற சில பாதிப்புகள் தோன்றியுள்ளன.

---

9. நடுவண் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் வழங்கிய வரையறையின்படி சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வருவாய் வரம்பு என்ன?

அ) ₹50 கோடி

ஆ) ₹100 கோடி

இ) ₹250 கோடி ☑

ஈ) ₹500 கோடி

- ✓ மத்திய பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வருவாய் வரையறையை விரிவுபடுத்தியுள்ளது. புதிய வரையறையின்படி, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் என்பவை வங்கிகள், நிதி நிறுவனங்கள் அல்லது காப்பீட்டு நிறுவனங்கள் அல்லாத பட்டியலிடப்படாத நிறுவனங்களாகும். முந்தைய கணக்கியல் ஆண்டில் ₹250 கோடி வரை விற்று முதல் ஈட்டியும் ₹50 கோடி வரை கடன் பெற்ற நிறுவனங்களும் இதன்கீழ்வரும்.

---

10. நடப்பாண்டின் (2021) உலக போதைப்பொருள் அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ) OECD

ஆ) IMF

இ) UNODC ☑

ஈ) UNICEF

- ✓ 2021 – உலக மருந்து அறிக்கையை ஐநா போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான அலுவலகம் (UNODC) வெளியிட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில், உலகளவில் 275 மில்லியன் மக்கள் போதைப்பொருளைப் பயன்படுத்தியதாகவும், 36 மில்லியன் மக்கள் போதைப்பொருள் நோய்க் கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வறிக்கை கூறுகிறது.
- ✓ கடந்த 24 ஆண்டுகளில், கஞ்சா பயன்பாடு சுமார் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது என்றும் இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சேதி தெரியுமா?

ஜூன்.25: குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் தில்லியிலிருந்து கான்பூரில் உள்ள சொந்த ஊருக்கு இரயிலில் சென்றார். இதன்மூலம் 2006ஆம் ஆண்டில் அப்துல் கலாமுக்குப்பிறகு ரயிலில் சென்ற குடியரசுத் தலைவரானார் இராம்நாத் கோவிந்த்.

ஜூன்.25: தமிழ்நாட்டிலேயே 100 சதவீதம் கரோனா தடுப்பூசி செலுத்திய கிராமமாக திருவாரூர் மாவட்டத்தில் உள்ள காட்டூர் தேர்வானது.

ஜூன்.26: ஸ்மார்ட் சிட்டி திட்டத்தைச் செயல்படுத்துவதில் நாட்டிலேயே தமிழ்நாடு மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது. முதலிடத்தில் உத்தர பிரதேச மாநிலம் உள்ளது.

ஜூன்.27: புதுச்சேரியில் N R காங்கிரஸ் – பாஜக கூட்டணி அரசில் 40 ஆண்டுகளுக்குப்பிறகு பெண் சமஉ சந்திரபிரியங்கா அமைச்சரானார். கடைசியாக 1980'இல் திமுக அமைச்சரவையில் ரேணுகா அப்பாதுரை அமைச்சராக இருந்தார்.

ஜூன்.28: டோக்கியோ ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டிக்குத் தேர்வான முதல் இந்தியர் என்னும் சிறப்பை இந்திய வீரர் சஜன் பிரகாஷ் பெற்றார்.

ஜூன்.29: சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இருபத்திரண்டு ஆண்டுகள் விளையாடிய முதல் மகளிர் கிரிக்கெட் வீராங்கனை என்னும் பெருமைக்குரியவரானார் இந்திய மகளிர் அணி கேப்டன் மிதாலிராஜ்.

ஜூலை.2: தமிழ்நாட்டில் வன்னியர் சமுதாயத்துக்கான 10.5 சதவீத உள் இட ஒதுக்கீட்டுக்குத் தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்தது.